# மதுரை அருகே 400 ஆண்டுகள் பழமைவாய்ந்த 7 கற்சிற்பங்கள் கண்டெடுப்பு



**மதுரை:** மதுரை மாவட்டம் கள்ளிக்குடி வட்டத்தில் உள்ள தென்னம நல்லூர் கிராமத்தில் சுமார் 400 ஆண்டுகள் பழமைவாய்ந்த கற்சிற்பங்கள் கண்டு எடுக்கப்பட்டுள்ளன.

சிவகங்கை அரசு மகளிர் கல்லூரியின் வரலாற்றுத்துறை கவுரவ விரிவுரையாளரும், பாண்டியநாடு பண்பாட்டு மையத்தின் தொல்லியல் கள ஆய்வாளருமான முனைவர் து முனீஸ்வரன் தலைமையில் ஆய்வாளர்கள் அனந்தகுமரன், சிவன் ஆகியோர் தென்னமநல்லூர் பகுதியின் மேற்பரப்பில் கள ஆய்வு மேற்கொண்டபோது கி.பி 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சதிக்கல் கண்டறியப்பட்டது.

இது குறித்து கள ஆய்வாளர் முனைவர் து.முனீஸ்வரன் கூறியாதவது: "மதுரையை நாயக்கர்கள் ஆட்சி செய்த காலத்தில் இப்பகுதியை தென்னவன் என்ற குறுநில மன்னர் ஆட்சி நிர்வாகம் செய்துள்ளார். அவரது பணியை

பாராட்டி நாயக்கர் மன்னர், இந்த பகுதிக்கு தென்னவன் நாடு என்று பெயர்சூட்டி உள்ளார். காலப்போக்கில் இது தென்னம நல்லூர் என பெயர் மருவியது.

**சதி வழக்கம்:** இறந்துபோன கணவருடன் அவரது மனைவியும் உடன்கட்டை ஏறி இறந்தபின் அவர்கள் நினைவாக எடுக்கப்படும் நினைவுக்கல் சதிக்கல் எனப்படுகிறது. இதில் கணவனுடன் மனைவியும் இருப்பது போன்று சிற்பம் அமைக்கப்பட்டிருக்கும். இப்பெண் சுமங்கலியாக இறந்தவள் என்பதைக் காட்ட கை உயர்த்தி இருப்பது போன்றும், அதில் வளையல் உள்ளிட்ட அணிகலன்கள் அணிந்தவளாகவும் காணப்படுகிறாள். தீயில் பாய்ந்து உயிர் விடுவது போன்ற சிற்பம் செதுக்கும் வழக்கம் இல்லை.

இத்தகைய சதிக்கல் கோவில்களை மாலையீடு, மாலையடி, தீப்பாஞ்சம்மன், மாலைக்காரி, சீலைக்காரி என்று பலவாறாக அழைப்பர். மாலை, சதி ஆகிய சொற்களுக்கு பெண் என்ற பொருள் உண்டு. நாயக்கர் மன்னர்கள் காலத்தில் கைம்பெண்களுக்கு பல இன்னல்கள் நேர்ந்தன. ஆனால் உடன்கட்டை ஏறி இறந்துபோன பெண்களை தெய்வமாகப் போற்றி வணங்கினர். கணவன் மீது கொண்ட அன்பினாலோ, கட்டாயத்தினாலோ பெண்கள் உடன்கட்டை ஏறும் பழக்கம் காணப்பட்டது. மதுரையை ஆட்சி செய்த நாயக்கர்களுக்கு கட்டுப்பட்டு பல குறுநில மன்னர்கள் ஆட்சி புரிந்தார்கள். குறுநில மன்னரின் ஆட்சிக்கு உட்பட்ட பல்வேறு இடங்களில் சதி எனும் உடன்கட்டை ஏறும் பழக்கம் காணப்பட்டது.

**ஏழு சதிக்கல்:** தற்போது ஊரின் கிழக்கு பகுதியில் நீரோடை அருகே முட்புதரில் இந்த சதிக்கற்கள் புதைந்து இருந்தன. இச்சதிக்கற்கள் 3 அடி உயரம், ஒன்றரை அடி அகலமும் கொண்டவை . கற்சிலை மேல் கூடாரம் அமைப்பு சாய்வாகவும், முக்கோண வடிவமாகவும் ,வட்ட வடிவமாகவும் காலத்திற்கேற்ப மாறுபடுகின்றன. மொத்தம் ஏழு சதிக்கல்கள் இருக்கின்றன. பொதுவாக இந்த சிற்பங்கள் அனைத்தும் ஒரே இடத்தில் இருப்பதால் சிற்ப வடிவத்தில் ஆணின்

உருவம் வலது காலைத் தொங்கவிட்டு இடது காலை மடக்கி வீரன் என்பதற்காக வலது கையில் வாள் கத்தி போன்றவை பொறிக்கப்பட்டுள்ளன.

ஆணின் சிற்பத்தின் அருகில் பெண் சிற்பம் அமைந்துள்ளது. பெண் சிற்பம் இடது காலை தொங்கவிட்டு வலது காலை மடக்கி வலது கையில் எலுமிச்சம் பழத்தை மடக்கிப் பிடித்து இருப்பது போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. அந்தப் பெண் சுமங்கலி என்பதன் குறியீடாக இது பார்க்கப்படுகிறது. இதே போன்ற வடிவம் ஒரே இடத்தில் 7 சிற்பங்கள் காணப்படுகின்றன. இவை தற்போது தனியார் நிலத்தில் புதர்கள் மண்டி கேட்பாரற்று கிடக்கிறது.” இவ்வாறு முனைவர் து.முனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

**ஒடிசாவில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் டிவியில் முதல் மெய்நிகர் செய்தி வாசிப்பாளர் ‘லிசா’ அறிமுகம்**



ஏஐ செய்தி வாசிப்பாளர் லிசா

**புவனேஸ்வர்:** ஒடிசா தனியார் தொலைக்காட்சி, செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பத்தில் உருவாக்கிய பெண் செய்தி வாசிப்பாளரை அறிமுகம் செய்துள்ளது. அதற்கு ‘லிசா’ என்று பெயரிடப்பட்டுள்ளது.

கம்ப்யூட்டர், இன்டர்நெட் தாண்டி தற்போது உலகம் முழுவதும் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பம் வளர்ந்து வருகிறது. இந்த தொழில்நுட்பத்தில் கேட்கும் அனைத்து வகையான கேள்விகளுக்கும் பதில் அளிக்கும் சாட்ஜிபிடி அறிமுகமானது. அமெரிக்காவில் நீதிமன்றங்களில் வழக்குகளில் வாதாட ஏஐ ரோபோ வழக்கறிஞர்கள் கூட அறிமுகப்படுத்தப்பட்டு விட்டது. அத்துடன் அனைத்துத் துறைகளிலும் ஏஐ தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சிக்கல்களை தீர்க்க ஆராய்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், ஒடிசா மாநிலத்தின் தனியார் தொலைக்காட்சி ‘ஓடிவி’, நாட்டிலேயே முதல் முறையாக மெய்நிகர் பெண் செய்தி வாசிப்பாளரை அறி முகம் செய்துள்ளது. இதற்கான விழா தலைநகர் புவனேஸ்வரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் மெய்நிகர் பெண் செய்தி வாசிப்பாளர் அனைவரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளார். அவருக்கு ‘லிசா’ என்று பெயரிட்டுள்ளனர். ‘ஓடிவி’ பிராந்திய அளவில் இலவச சேனலாக செயல்பட்டு வருகிறது.

‘லிசா’வை அறிமுகப்படுத்தி ஓடிவி நிர்வாக இயக்குநர் ஜகி மன்கட் பாண்டா கூறியதாவது:

தொலைக்காட்சியில் லிசாதான் முதல் பெண் மெய்நிகர் செய்திவாசிப்பாளர். ஒரு காலத்தில் கம்ப்யூட்டர் என்பதே ஆச்சரியப்படும் விஷயமாக இருந்தது. அதன்பிறகு காலம் மாறி தற்போது இன்டர்நெட் ஆதிக்கம் செலுத்துகிறது. இன்டர்நெட்டில் மக்கள் அதிக நேரம் செலவிடுகின்றனர். இதுபோன்ற மாற்றங்களை கருத்தில் கொண்டு ‘ஓடிவி’ சேனல் முதல் முறையாக பெண் மெய்நிகர் செய்தி வாசிப்பாளர் லிசாவை அறிமுகம் செய்துள்ளோம்.

நாங்கள் ஒடிசாவில் கடந்த 1997-ம் ஆண்டு தொலைக்காட்சி சேனல் தொடங்கும்போது அதன் இலக்கில் தெளிவாக இருந்தோம். அதன்பிறகு 26 ஆண்டுகளாக முதல் இடத்தில் இருக்கிறோம். இப்போது இன்னொரு மைல்கல்லை எட்டியிருக்கிறோம். லிசாவை அறிமுகம் செய்ததன் மூலம், தொலைக்காட்சி ஒளிபரப்பில் மேலும் பல மைல்கற்களை எட்ட முடியும்.

தற்போது எங்கள் தொலைக்காட்சி பார்வையாளர்கள் மாறி உள்ளனர். அதிகபட்சமான செய்திகளை வழங்குவதில் அவர்களுக்கு ஆர்வம் இல்லை. சில செய்திகளில் வேறு பரிமாணத்தை அல்லது கேள்விகளுக்கான பதில்களை அவர்கள் எதிர்பார்க்கின்றனர். அந்த கோணத்தில் அவர்களது விருப்பத்தை நிறைவு செய்யும் வகையில் தற்போது ஒடிவி தொலைக்காட்சியில் லிசா அறிமுகமாகி இருக்கிறார். இதற்கு செயற்கை நுண்ணறிவு பல வழிகளில் எங்களுக்கு உதவியாக இருக்கிறது. இவ்வாறு ஜகி மன்கட் பாண்டா கூறினார்.

**ஒடியா, ஆங்கிலத்தில் பேசும்:** ஒடிவி.யின் டிஜிட்டல் வர்த்தக தலைவர் லிடிஷா மன்கட் பாண்டா கூறும்போது, "லிசா அறிமுகம் எங்களுக்கு புதுவித அனுபவம். கூகுள் கூட ஒடியா மொழியை ஆங்கிலத்தில் சரியாக மொழிபெயர்த்து வழங்குவதில்லை. எங்கள் குழு தீவிர முயற்சி செய்து லிசாவை கொண்டு வந்துள்ளோம். உங்களைப் போல ஒடியா மொழியை லிசா சரளமாக பேச முடியாவிட்டாலும், கூகுளைவிட சிறப்பாக பேசும்" என்றார். ஒடிவி.யில் அறிமுகமாகி இருக்கும் லிசா, பல மொழிகளையும் பேசும்திறன் படைத்தது. எனினும் முதல் கட்டமாக ஒடியா மற்றும் ஆங்கிலத்தில் மட்டும் பேசும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## வட மாநிலங்களில் வரலாறு காணாத கனமழை: அதிகாரிகளுடன் பிரதமர் மோடி ஆலோசனை



**புதுடெல்லி:** வடமாநிலங்களில் பெய்துவரும் வரலாறு காணாத கனமழை காரணமாக இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து பிரதமர் நரேந்திர மோடி மத்திய அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் நேற்று ஆலோசனை நடத்தினார்.

டெல்லி, ஹரியாணா, பஞ்சாப், உத்தர பிரதேசம், உத்தராகண்ட், இமாச்சல், காஷ்மீர் உள்ளிட்ட வட மாநிலங்களில் கடந்த சில தினங்களாக வரலாறு காணாத கனமழை பெய்து வருகிறது. டெல்லியில் ஒரே நாளில் 15.3 சென்டி மீட்டர் மழை பதிவானது. இது 41 ஆண்டுகளில் இல்லாத அளவு (ஜூலை மாதத்தில்) ஆகும்.

இதனால் பல இடங்களில் வெள்ளப்பெருக்கும் நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது. யமுனை ஆற்றில் அபாய அளவைத் தாண்டி வெள்ளம் பாய்கிறது. மழை தொடர்பான விபத்துகளில் சிக்கி 30-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

டெல்லி, குருகிராம் உட்பட வடமாநிலங்களில் உள்ள முக்கிய நகரங்களில் உள்ள சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் போக்குவரத்து ஸ்தம்பித்துள்ளது.

இமாச்சலில் 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கனமழை பெய்து வருகிறது. இதையடுத்து, அங்கு 7 மாவட்டங்களில் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் ஓடும் ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. குல்லு நகருக்கு அருகே ஓடும் பீஸ் ஆற்றின் கரையோரப் பகுதிகளில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. இதுபோல பாலங்கள், நெடுஞ்சாலைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. இம்மாநிலத்தில் நிலச்சரிவு மற்றும் வெள்ளம் தொடர்பான விபத்தில் சிக்கி 14 பேர் உயிரிழந்தனர்.

கனமழை காரணமாக ரயில் சேவையும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. 17 ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் 12 ரயில்கள் வேறு பாதையில் திருப்பி விடப்பட்டுள்ளதாகவும் வடக்கு ரயில்வே தெரிவித்துள்ளது. தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படையினர் உள்ளூர் நிர்வாகத்தினருடன் இணைந்து மீட்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த சூழ்நிலையில், பிரதமர் மோடி, மத்திய அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் நேற்று ஆலோசனை நடத்தினார். அப்போது வெள்ள பாதிப்பு குறித்து அதிகாரிகள் பிரதமர் மோடியிடம் எடுத்துரைத்தனர்.

இதுகுறித்து பிரதமர் அலுவலகம் ட்விட்டரில் வெளியிட்ட பதிவில், "வடமாநிலங்களில் பெய்து வரும் கனமழை குறித்து பிரதமர் மோடி, மூத்த அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். உள்ளூர் நிர்வாகம், தேசிய பேரிடர் மீட்புப் படை, மாநில பேரிடர் மீட்புப் படையினர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்" என கூறப்பட்டுள்ளது.

**வீட்டிலேயே இருங்கள்..** இமாச்சல பிரதேசத்தில் அடுத்த 48 மணி நேரத்துக்கு கனமழை பெய்யும் என இந்திய வானிலை ஆய்வு மையம் நேற்று முன்தினம் தெரிவித்தது. இந்நிலையில், இமாச்சலின் பிலாஸ்பூர், சோலன், சிம்லா, சிர்மார், உனா, ஹமிர்பூர், மண்டி மற்றும் குல்லு ஆகிய பகுதிகளில் மிதமானது முதல் மிக கனமழை வரை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் நேற்று தெரிவித்தது.

இதுகுறித்து இமாச்சல் முதல்வர் சுக்விந்தர் சிங் சுகு நேற்று ட்விட்டரில் வெளியிட்ட பதிவில், "அடுத்த 24 மணி நேரத்துக்கு கனமழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதால், பொதுமக்கள் வீட்டிலேயே இருக்க வேண்டும். கனமழை காரணமாக நிலச்சரிவு, வெள்ளம் மற்றும் இதர பாதிப்பு ஏற்பட்டால் 1100, 1070 மற்றும் 1077 என்ற உதவி எண்களில் தொடர்புகொண்டு தகவல் தெரிவிக்கலாம்.

வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உதவிகளை அரசு செய்து வருகிறது. அனைத்து சட்டப்பேரவை உறுப்பினர்களும் தங்கள் தொகுதிக்குச் சென்று பொதுமக்களுக்கு தேவையான உதவிகளை செய்ய வேண்டும்" என கூறியுள்ளார்.

EVA STALIN IAS ACADEMY